ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1465/20 - 2006 ඔක්තෝබර් 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.10.05

1465/20 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 44 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைகளை ஆக்குகின்றேன்.

(ஆ) இத்தால் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சாதனங்களுக்குமான முத்திரைத் தீர்வைகள் 06.10.2006 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் விலக்களிப்புச் செய்யப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2006 ஏப்பிரல் 3 ஆந் திகதிய 1439/2 ஆம் இலக்க மற்றும் 2006 ஏப்ரல் 20 ஆந் திகதிய 1441/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளின் மூலம் வெளியிடப்பட்டதும் அப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளைகளும் 06.10.2006 ஆந் திகதியிலிருந்து செயன்வலுப்பெறும் வகையில் நீக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
(நிதி, திட்டமிடல் அமைச்சர்).

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2006, ஒற்றோபர் 5.

**அட்டவணை**

1. எவரேனும் அரச உத்தியோகத்தரொருவரின் வேண்டுகோளுக்கமைய ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் விதிப்புரைகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் சத்தியக்கடதாசி ;
2. தனது கடமைகளை முறையாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு எவரேனும் அரச உத்தியோகத்தரொருவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் முறி அல்லது ஈடு ;

3. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, சட்டத்தின் 67 (3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட கட்டளை வலுவில் இருக்கும் ஏதேனும் நாடொன்றின் அரசினால், அரசுக்காக அல்லது அரசின் பொருட்டு நடைமுறையிலிருக்கும் ஏதேனும் சாதனப்பத்திரம் ;

4. உணவுப் பயிர்கள் அல்லது ஆபரணங்களை அடகு வைப்பதற்காக ஏதேனும் சாதனம் ;

5. காணாமல் போன அல்லது அழிந்த சான்றிதளுக்காக வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ் அல்லது தற்போதுள்ள பங்குச் சான்றிதழ்களுக்குப் பதிலாக எனினும் தற்போதுள்ள பங்குச் சான்றிதழ்களின் பெறுமதிக்கு மேற்படாத, அதிகமான அல்லது குறைந்த பங்குகளின் எண்ணிக்கைக்கான ஏதேனும் புதிய பங்குச் சான்றிதழ் ;

6. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 11 ஆவது பிரிவின்கீழ் பங்கு கொடுக்கல் வாங்கல் வரியை அறவிட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களாக இருப்பின் விற்பனை ஒன்று அல்லது கொள்வனவில் ஏதேனும் பங்கை ஆளொருவரினால் விற்பனை செய்து இன்னொருவரினால் கொள்வனவு செய்த பின்னர் அதனுடன் தொடர்புபட்டவாறு வழங்கப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றிதழ் ;

7. 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகத்தின் ஏதேனும் பங்குத் தொகை தொடர்பான பங்கு வழங்கல், கைமாற்றல் அல்லது சாட்டுதலுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றிதழ் ;

8. 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, விவசாய ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு பயன்பெறும் திட்டத்திற்கான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனப்பத்திரம் ;

9. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் வரையறைக்குள் பதிவுசெய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கமொன்றினால் அல்லது அந்த சங்கத்திற்காக அல்லது அந்தச்சங்கத்தின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனப்பத்திரமொன்று ;

10. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் வரையறைக்குள் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் அதனுடன் தொடர்புபட்ட பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வியாபார நடவடிக்கைகளுக்காகவும் உறுப்பினரொருவரினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனப்பத்திரம் ;

11. பரஸ்பர பயன்பேறுகள் இலங்கையில் உள்ள ஏற்புடைய தூதரகங்களுக்கு கிடைப்பின் 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகளின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் இராச்சியத்தின் அல்லது ஏதேனும் அமைப்பின் தூதரகங்களுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பண்டம் அல்லது சேவைகளுக்காக ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அடிப்படையிலான சாதனப்பத்திரம் ;

12. (அ) ஆயுள் அல்லது மருத்துவக் காப்புறுதி ; அல்லது

(ஆ) (i) நிர்மாணத் தொழிற்துறை அல்லது விவசாயத்துறையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ; அல்லது

(ii) போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் தொடர்பான காப்புறுதிப்பூட்கை

13. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் வானூர்தி அல்லது 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வணிகக் கப்பற் தொழில் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கப்பல் தொடர்புபடும் ஏதேனும் ஈட்டுறுதி ;

14. அடகு உரிமையாளர்களினால் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் நாணய சபையினால் உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக அல்லது விசேட வங்கியொன்று, 1988 ஆம் அண்டின் 78 ஆம் இலக்க,

நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் நிதிக் கம்பனியொன்று, 1942 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனமொன்று, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிமூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட :

(அ) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ; அல்லது

(ஆ) வீடொன்றை கொள்வனவு செய்வதற்காக அல்லது வீடொன்றை நிர்மாணிப்பதற்காகக் காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக.

பெற்றுக்கொள்ளப்பட்ட 3 மில்லியன் ரூபா அல்லது அதற்கு குறைந்த பணம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் அடகு ;

15. போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக அத்தகைய நிதிக் குத்தகை ஏதேனும் தவிர ஏதேனும் ஆதனம் தொடர்பில் செய்யப்பட்ட நிதிக் குத்தகையொன்று ;

16. போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏதேனும் அசையும் சொத்துகள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் ஏதேனும் தவணைக்கொடுப்பனவு கொள்வனவு உடன்படிக்கையொன்று ;

17. கட்டிடமொன்றுக்காக மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய வாடகை அல்லது குத்தகை கட்டணம் 5,000 ரூபாவிற்கு மேற்படாத வாடகை அல்லது குத்தகை வழங்கல் சாதனமொன்று ;

18. ஆயிரம் ரூபாவிற்கு குறைவான ஏதேனும் பணம் அல்லது வேறு ஆதனத்துக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது விலக்களிப்பு அல்லது 1000 ரூபாவிற்கு மேற்படாமல் எவரேனும் தொழில் வழங்குநரால் ஊழியர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட 25,000 ரூபாவிற்கு மேற்படாத உழைப்பூதியம் ;

19. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வர்த்தக விஷேட வங்கியொன்று அல்லது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிதிக்க கம்பனி அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனமொன்றில் வைப்புச் செய்யும்போது அல்லது பணம் மீளப்பெறும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டொன்று ;

20. விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் அரசினால் அல்லது அரசுக்காக அல்லதுஅரசின் சார்பாக அத்தகைய சாதனம் தொடர்பில் அரசாங்கம் வரி செலுத்துவதற்கு பொறுப்புடையதாக்கப்படும் ஏதேனும் சாதனம் ஒன்றை நிறைவேற்றும்போது :

21. ஆளொருவரினால் கொடுப்பனவிற்காக அல்லது ஏதேனும் பொருட்கள் விற்பனையின் போது அல்லது சேவைகளை வழங்கும்போது அத்தகைய விற்பனை அல்லது ஏற்பாடுகளை உடனடுத்துப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் பற்றுச்சீட்டு ;

22. இறப்பின்போதான பணிக்கொடை அல்லது இறப்பு அல்லது காயத்திற்காக வழங்கப்படும் நட்டஈட்டிற்காகப் பெறப்படும் பணத்தொகையொன்றுக்காக ஆளொருவரினால் பெறப்படும் பற்றுச்சீட்டு ;

23. ஓய்வூதியம் பெற்றுக்கொண்டதற்காக வழங்கப்படும் ஏதேனும் பற்றுச்சீட்டு ;

24. வர்த்தகக் கடதாசி அல்லது பங்குலாபம் ;

25. அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்திற்காக அல்லது அரசாங்கத்தின் சார்பாக ஆளொருவரினால் கிரயம் பெற்றுக்கொள்ளப்படாதபோது செய்யப்படும் மாற்றுதி அல்லது விற்பனை உறுதியொன்று ;

26. பின்வரும் சட்ட நடவடிக்கைகளின்போது சமர்ப்பிக்கப்படும் கீழ்க்காணும் ஆவணங்கள் ;

(அ) ஏதேனும் நீதிமன்றமொன்றில் ஏதேனும் வழக்கு தொடர்பான நடவடிக்கையின் போது உத்தியோகபூர்வமாக வழக்கு தாக்கல் செய்யும் அல்லது வழக்குத் தாக்கல் செய்யப்படும் அல்லது சம்பந்தப்படும் அரச உத்தியோகத்தர்களினால் அந்தந்த நீதிமன்றங்களுக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ;

(ஆ) ஏதேனும் நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட ஏதேனும் வழக்கு விசாரணைக்கான நடவடிக்கைகளின்போது உரியவாறு இடமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவரினால் அந்த நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ;

(இ) தன்னை நிரபராதியென அறிவிக்குமாறு ஏதேனும் நீதிமன்றமொன்றுக்கு கோரிக்கை விடுத்து எவரேனும் ஒருவரினால் அந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் ;

(ஈ) ஹேபியர்ஸ் கொபர்ஸ் எழுத்தாணைக் கட்டளையொன்றுக்காக செய்யப்படும் வேண்டுகோளொன்று தொடர்பாக ஏதேனும் நீதிமன்றமொன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ;

(உ) 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சட்ட உதவிகளைப் பயன்படுத்த வழக்குத்தாக்கல் செய்யும் அல்லது பிரதிவாதியின் சார்பாக தோன்றும் அல்லது சம்பந்தப்படும் எவரேனுமோர் நபர் என்ற ரீதியில் குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படும் ஆவணங்கள் ;

(ஊ) மோட்டார் வாகனமொன்றினால் ஏற்பட்ட மரணம் அல்லது சேதத்தினால் ஏற்படும் ஏதேனும் இழப்பீட்டை கோரும் எவரேனும் நபரொருவரினால் ஏதேனும் நீதிமன்றமொன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ;

(எ) ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனு ;

(ஏ) தமது கோரிக்கையின் மீது அல்லது தமது வழிநடத்தலின் கீழ் ஏதேனும் நீதிமன்றமொன்றினால் விடுக்கப்படும் பிடியாணை.

10-489

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.